ஊடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477669 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| வெளியிடுபவர் | பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் |
|---|---|
| திகதி | 2025.07.03 |

# நிதியியல் அறிவினைக் கொண்ட தேசமொன்றை கட்டியெழுப்புவதை நோக்கி நிலைமாறுகின்ற நிதியியல் அறிவுசார் முன்முயற்சிகளை மத்திய வங்கி அங்குரார்ப்பணம் செய்துள்ளது

“நிதியியல் அறிவினைக் கொண்ட இலங்கை” என்ற பரந்தளவிலான தொலைநோக்கை கட்டியெழுப்புவதுடன் அணிசேர்ந்து, நிதியியல் அறிவு பற்றிய வழிகாட்டலின்[1] கீழ் பல்வேறு மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய முன்முயற்சிகளை அங்குரார்ப்பணம் செய்வதன் மூலம், மத்திய வங்கி 2025 யூலை 3 அன்று அதன் நிதியியல் வசதிக்குட்படுத்தல் பயணத்தில் குறிப்பிடத்தக்க மைற்கல்லை அடைந்துள்ளது. ஆற்றல்வாய்ந்த நிதியியல் தீர்மானத்தை மேற்கொள்ளுதல் மற்றும் நிலைபெறத்தக்க பொருளாதார நலனோன்புகை போன்றவற்றுக்காக பொதுமக்களின் நிதியியல் நடத்தையை மாற்றும் வகையில் அறிவு, திறன்கள், மற்றும் எண்ணப்பாங்குடன் அவர்களை வலுவூட்டுவதற்கான மத்திய வங்கியின் அர்ப்பணிப்பினை இம்முன்னெடுப்புக்கள் மீண்டும் உறுதிப்படுத்துகின்றன.

நிதியியல் அறிவு வழிகாட்டலின் உள்ளடக்க விருத்தி மற்றும் வேறுபட்ட அடிப்படை கூறுகளை ஒன்றிணைக்கும் எண்ணக்கரு என்பவற்றின் கீழ் இத்தகைய மாறுதல்மிக்க முன்முயற்சிகளை நடைமுறைப்படுத்துவதில் தேசிய நிதியியல் வசதிக்குட்படுத்தல் உபாயத்தின் கீழ், மத்திய வங்கியின் பிரதேச அபிவிருத்தித் திணைக்களம் முன்னணி வகித்துள்ளது. நாட்டின் ஒவ்வொரு பகுதியையும் சென்றடையும் வகையில் தரமானதும் உயர்ந்தளவிலான நிகழ்ச்சித்திட்டங்களைக் கொண்ட துண்டாடப்பட்ட முயற்சிகளுக்கு பதிலீடாக வழங்கப்படுகின்ற ஒன்றிணைக்கப்பட்டதும் தேசியளவில் கூட்டிணைக்கப்பட்டதுமான அணுகுமுறையை தாபிப்பதனூடாக இலங்கையின் நிதியியல் கல்வித் தோற்றப்பாட்டிற்கு மாறுவதற்கு இவ்வழிகாட்டல் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் அனைத்தையுமுள்ளடக்கிய முதல் நிதியியல் அறிவு பற்றிய பாடவிதானத்தை வெளியிடுவது இதன் மையப்பொருளாக விளங்குகின்றது; துல்லியத்தையும், சமகால பொருத்தப்பாட்டினையும், மற்றும் செயற்பாட்டு ரீதியிலான இணங்குதன்மையையும் உறுதிசெய்யும் வகையில், மத்திய வங்கியின் முக்கியத் திணைக்களங்களுடனும் வெளிவாரியாக விடயம் குறித்த நிபுணர்களுடனும் விரிவான கலந்தாலோசனைகளை எடுத்துக்காட்டுகின்ற அதிக சிரத்தையுடன் வடிவமைக்கப்பட்ட கல்விசார் கட்டமைப்பினை இப்பாடவிதானம் உள்ளடக்குகின்றது. பொருளாதார மற்றும் நிதியியல் சூழல், தனிப்பட்ட நிதி, நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சி நிதி, டிஜிட்டல் அறிவு, நிதியியல் வாடிக்கையாளர் பாதுகாப்பு, மற்றும் வரி பற்றிய அறிவு, போன்ற அறிவுசார் எண்ணக்கருக்களை இப்பாடவிதானம் உள்ளடக்குகின்றதுடன் ஆற்றல்வாய்ந்த நிதியியல் தீர்மானத்தை மேற்கொள்வதற்கான அடித்தளத்தை உருவாக்கும் கட்டமைப்பொன்றை உருவாக்கியுள்ளது.

[1] https://www.cbsl.gov.lk/sites/default/files/cbslweb_documents/publications/otherpub/financial_literacy_roadmap_of_sri_lanka_t.pdf

சீரானதும் உயர்தர கற்றல் அனுபவத்தையும் உறுதிசெய்கின்ற நிதியியல் கல்வி மற்றும் பொதுமக்கள் விழிப்பூட்டல் பிரச்சாரங்களுக்கான முதுகெலும்பாக இத்தரமான படைப்பு சேவையாற்றும். இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினதும் களனிப் பல்கலைக்கழகத்தின் நெருங்கிய ஒத்துழைப்பினதும் தாராள நிதியியல் மற்றும் தொழில்நுட்ப ஆதரவுடன் இத்தகைய மைற்கல் அடையப்பட்டது.

பாடவிதானத்தை நிறைவுசெய்யும் வகையில், மத்திய வங்கியானது இலங்கையின் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தினதும் யப்பான் பன்னாட்டு கூட்டுறவு முகவராண்மையினதும் ஆதரவுடன் உருவாக்கப்பட்ட இரு அறிவார்ந்த கல்விசார் காணொளி தொடர்களை வெளியிட்டது. மிதமிஞ்சிய கடன்சுமை, குறைவான சேமிப்பு பழக்கம், மற்றும் நிதியியல் மோசடிகள் போன்ற நிதியியலுடன் தொடர்புடைய சவால்களின் அழுத்தத்தை இவை நிவர்த்திசெய்கின்றன. இத்தகைய முக்கிய செய்திகளை பெருக்குவதன் மூலமும் மத்திய வங்கியின் குறித்த அவையோருக்கும் தளங்களுக்கும் ஏற்ப அவற்றை மாற்றியமைப்பதன் மூலமும் இத்தேசியளவிலான செயற்பாட்டுடன் இணைவதற்கு ஊடக நிறுவனங்கள், கல்வியாளர்கள், உள்ளடக்க விருத்தியாளர்கள் மற்றும் சமுதாய தலைவர்கள் போன்றோருக்கு மத்திய வங்கி அழைப்பினை விடுக்கின்றது.

நிலைபெறுத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு, இலங்கை வங்கியாளர் நிறுவகத்துடன் இணைந்து உருவாக்கப்பட்ட நிதியியல் அறிவு நிகழ்ச்சித்திட்டத்தில் சான்றுப்படுத்தப்பட்ட பயிற்றுநர்களை மத்திய வங்கி அறிமுகப்படுத்தியுள்ளது. நாடளாவிய ரீதியிலுள்ள சமுதாயங்களுக்கு சீரானதும் தாக்கமிகுந்த நிதியியல் கல்வியை வழங்குவதற்கான தரப்படுத்தப்பட்ட முறையியல்களையும் வளங்களையும் கொண்டமைந்து குறிப்பாக வங்கிகள் மற்றும் அரச துறை நிறுவனங்கள் போன்றவற்றிலிருந்து 100 தகைமையுடைய பயிற்றுநர்களை ஆண்டுதோறும் வழங்குவதற்கு இந்நிகழ்ச்சித்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

நிதியியல் கல்வியில் தொடர்ச்சியான புத்தாக்கத்தையும் ஆய்வினையும் முன்னெடுத்துச்செல்லும் உபாய பங்குடைமையுடன் இணையும் வகையில், களனிப் பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதனூடாக இத்தொடக்கம் மேலும் சிறப்பிக்கப்பட்டது. மத்திய வங்கியின் அனைத்து நிதியியல் அறிவுசார்ந்த முயற்சிகளிலும் சான்று அடிப்படையிலான அணுகுமுறைகள் மற்றும் புலமைசார் தெளிவிற்கான அதன் உறுதிப்பாட்டை இவ் ஒத்துழைப்பு பிரதிபலிக்கின்றது.

[இன்று வெளியிடப்பட்ட அனைத்து விடயங்களும் வளங்களும்:www.cbsl.gov.lk என்ற இணையத்தளத்தில் தற்போது கிடைக்கப்பெறுகின்றன.]


Launch of the
Financial Literacy Curriculum


75 YEARS
STABILITY FOR PROSPERITY